


**20. 01. 2026**

தலைப்புச் செய்திகள்

1. பிஜேபியின் பாரம்பரிய மரபுகளை புதிய தலைவர் திரு. நிதின் நபின் முன்னெடுத்து செல்வார் என்று கட்சியின் மூத்த தலைவரும், பிரதமருமான திரு. நரேந்திரமோடி நம்பிக்கை வெளியிட்டுள்ளார்..

2. நாட்டின் மின்னணு ஏற்றுமதி 47 பில்லியன் டாலராக உயர்ந்துள்ளது என்று மத்திய தகவல் தொழில்நுட்பத்துறை அமைச்சர் திரு. அஷ்விணி வைஷ்ணவ் கூறியுள்ளார்.

3. தமிழக சட்டப்பேரவையில் தேசிய கீதம் இசைக்கப்படாததால், ஆளுநர் உரையை வாசிக்காமல், ஆளுநர் திரு. ஆர். என். ரவி அவையிலிருந்து வெளியேறினார்.

4. ஆளுநரின் செயல் அரசியல் சாசனத்திற்கு புறம்பானது என்று முதலமைச்சர் திரு. மு. க. ஸ்டாலின் சட்டப்பேரவையில் தெரிவித்துள்ளார்.

5. சிறப்பு காலமுறை ஊதிய விகிதத்தில் பணியாற்றும் ஊழியர்களின் ஓய்வூதிய கோரிக்கைகள் பரிசீலிக்கப்பட்டு உரிய ஆணைகள் விரைவில் வெளியிடப்படும் என்று ஆளுநர் உரையில் குறிப்பிடப்பட்டுள்ளது..

இனி விரிவான செய்திகள்

************

நிதின் நபின்

பாரதிய ஜனதா கட்சியின் தேசிய தலைவராக திரு. நிதின் நபின் இன்று பதவி ஏற்றார்.

புதுடெல்லியில் உள்ள கட்சியின் தலைமையகத்தில் நடைபெற்ற பதவி ஏற்பு நிகழ்ச்சியில் திரு. நிதின் நபின் ஒருமனதாக தேர்ந்தெடுக்கப்பட்டதற்கான அறிவிப்பு வெளியிடப்பட்டது.

இதனை தொடர்ந்து கட்சியின் மூத்த தலைவரும், பிரதமருமான திரு.நரேந்திரமோடி அவருக்கு பாராட்டு தெரிவித்தார்.

தொடர்ந்து பேசிய பிரதமர், நல்லாட்சி மற்றும் ஆளுமையின் வடிவமாக பிஜேபி உருவெடுத்துள்ளதாக பெருமிதம் தெரிவித்தார்.

உலகிலேயே மிகப்பெரிய கட்சியாக திகழும் பிஜேபியின் பாரம்பரிய மரபுகளை திரு.நிதின் நபின் முன்னெடுத்து செல்வார் என்று நம்பிக்கை தெரிவித்தார்.

எழுச்சிமிகு சக்தியாகவும், அமைப்பு செயலாளராகவும், பணியாற்றியுள்ள புதிய தலைவரின் சேவை, அனைவருக்கும் பயனுள்ளதாக இருக்கும் என்று குறிப்பிட்டார்.

பிஜேபியின் சிறிய பிரிவு முதல் தேசிய தலைவர் வரை ஜனநாயக ரீதியில் தேர்ந்தெடுக்கப்படுவதாக சுட்டிக்காட்டிய பிரதமர் கட்சியின் மீது மக்கள் கொண்ட நம்பிக்கையை எடுத்துரைத்தார்.

கடந்த 11 ஆண்டுகளாக மக்களின் நம்பிக்கையை பெற்ற கட்சியாக உருவெடுத்துள்ள பிஜேபிக்கு மக்கள் சேவையே முதன்மையான நோக்கம் என்றும் குறிப்பிட்டார்.

சுதந்திரத்திற்கு பின்னர் பல்வேறு ஆட்சி முறைகளை கண்ட நம் தேசம் தற்போது வளர்ச்சி, ஸ்திரதன்மை மற்றும் நல் ஆளுமைக்கான மாதிரி அரசை கண்டுவருவதாக குறிப்பிட்டார்.

மத்திய அமைச்சரும், முன்னாள் பிஜேபி தேசிய தலைவருமான திரு.ஜே.பி.நட்டா உட்பட மத்திய அமைச்சர்கள் திரு. நிதின் நபினுக்கு பாராட்டு தெரிவித்தனர்.

************

அஷ்விணி வைஷ்ணவ்

நாட்டின் மின்னணு பொருட்கள் ஏற்றுமதி சென்ற ஆண்டு 47 பில்லியன் டாலராக அதிகரித்து சாதனை படைத்துள்ளதாக மத்திய மின்னணு தகவல் தொழில்நுட்பத்துறை அமைச்சர் திரு.அஷ்விணி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.

உற்பத்தி சார்ந்த ஊக்கத்தொகையுடன் கூடிய கைபேசி ஏற்றுமதி மூலம் மட்டும் 30 பில்லியன் டாலர் கிடைக்கப்பெற்றுள்ளதாக தமது சமூக வலைதள பதிவில் எடுத்துரைத்தார்.

நம் நாட்டின் 3 ஆவது பெரிய ஏற்றுமதி அம்சமாக மின்னணு திகழ்கிறது என்றும் அவர் குறிப்பிட்டார்.

2015ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் மின்னணு ஏற்றுமதி 11 மடங்கு அதிகரித்திருப்பதாக எடுத்துரைத்தார்.

மகளிர் பங்களிப்புடன், 25 லட்சம் புதிய வேலை வாய்ப்புகள் உருவாக்கப்பட்டுள்ளதோடு,

சிறு குறு நடுத்தர தொழில் நிறுவனங்களுக்கு புதிய வாய்ப்புகள் ஏற்படுத்தப்பட்டதாகவும் அமைச்சர் கூறினார்.

இளையோரின் திறன்களை மேம்படுத்த மத்திய அரசு மேற்கொண்ட நடவடிக்கையை அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

************

ராஜீவ் ரஞ்சன் சிங்

மீன்வளத்துறையின் உயர்மட்ட வட்டமேஜை மாநாடு மத்திய மீன்வளத்துறை அமைச்சர் திரு. ராஜீவ் ரஞ்சன் சிங் தலைமையில் நாளை புதுதில்லியில் நடைபெறுகிறது.

83 நட்புறவு நாடுகளை சேர்ந்த உயர்நிலை பிரதிநிதிகள் இதில் பங்கேற்கின்றனர்.

இருதரப்பு வர்த்தகம், கடல் உணவு ஏற்றுமதி மேம்பாடு, சர்வதேச சந்தைகள் இணைப்பு போன்றவற்றை நோக்கமாக கொண்டு இந்த மாநாடு நடைபெறுகிறது.

மீன்வள துறை வணிகர்களுக்கு புதிய வாய்ப்புகளுக்கான திறவுகோலாக இம்மாநாடு திகழும் என்று மத்திய மீன்வள அமைச்சகம் தெரிவித்துள்ளது.

************

ஆளுநர் மாளிகை அறிக்கை

தமிழக சட்டப்பேரவையில் தேசிய கீதம் இசைக்கப்படவில்லை என்ற காரணத்தை சுட்டிக்காட்டி

ஆளுநர் திரு.ஆர்.என்.ரவி, ஆளுநர் உரையை இன்று வாசிக்காமல் அவையை விட்டு புறப்பட்டு சென்றார்.

இதுதொடர்பாக ஆளுநரின் மக்கள் மாளிகை வெளியிட்ட அறிக்கையில், அரசியல் சாசனத்தின் அடிப்படை கடமையான தேசிய கீதம் மீண்டும் அவமதிக்கப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

தமிழகத்தில் 12 லட்சம் கோடி ரூபாய்க்கு அதிகமான முதலீடுகள் ஈர்க்கப்பட்டதாக உரையில் இடம்பெற்றுள்ளது உண்மைக்கு புறம்பான தகவல் என்றும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மகளிர் பாதுகாப்பு உள்ளிட்ட மக்களை பாதிக்கும் பல்வேறு முக்கிய பிரச்சனைகள் இதில் புறக்கணிக்கப்பட்டிருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழக அரசின் மீது பல்வேறு துறைகளில் ஊழியர்களுக்கு அதிருப்தி உள்ள நிலையில் அதனை களைவதற்கான நடவடிக்கைகள் குறித்து எதுவும் உரையில் வெளியிடப்படவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆளுநரின் ஒலிவாங்கி தொடர்ந்து அணைக்கப்பட்டதாகவும், அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

ஆளுநர் உரையை புறக்கணித்து சென்ற சில நிமிடங்களிலேயே, உரையை வாசிக்க மறுத்தமைக்கான 13 அம்ச விளக்க அறிக்கையை ஆளுநரின் மக்கள் மாளிகை வெளியிட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

************

முதலமைச்சர் – சட்டப்பேரவை

ஆளுநரின் செயல் அரசியல் சாசனத்திற்கு விரோதமானது என்றும், தேர்ந்தெடுக்கப்பட்ட அரசுக்கு அவதூறு பிறப்பிப்பதாக இருப்பதாகவும் முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் சட்டப்பேரவையில் தெரிவித்துள்ளார்.

தொடர்ந்து அவைத்தலைவர் திரு.அப்பாவு தமிழில் மொழிபெயர்க்கப்பட்ட ஆளுநரின் உரையை வாசிக்க தொடங்கியபோது, அஇஅதிமுக உறுப்பினர்கள் ஒட்டுமொத்தமாக எழுந்து மாநிலத்தின் சட்ட ஒழுங்கு நிலைமை சீர்கெட்டுள்ளதாக கூறி அவையிலிருந்து வெளிநடப்பு செய்தனர்.

இதனை தொர்ந்து பிஜேபி உறுப்பினர்களும், அன்புமணி ஆதரவு பா.ம.க. உறுப்பினர்களும் அவையிலிருந்து வெளிநடப்பு செய்தனர்.

************

சட்டப்பேரவை

தமிழ்நாட்டில் சிறப்பு காலமுறை ஊதிய விகிதத்தில் பணியாற்றும் ஊழியர்களின் ஓய்வூதிய கோரிக்கைகள் பரிசீலிக்கப்பட்டு உரிய ஆணைகள் விரைவில் வெளியிடப்படும் என்று ஆளுநர் உரையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழக சட்டப்பேரவையில் நடப்பாண்டிற்கான முதல் கூட்டத்தில், ஆளுநர் உரையின் தமிழாக்கத்தை வாசித்த பேரவை தலைவர் திரு.அப்பாவு, உறுதியளிக்கப்பட்ட ஓய்வூதிய திட்டத்தினை அரசு செயல்படுத்தி உள்ளதாக குறிப்பிட்டார்.

திருச்சி – மதுரை - ஒசூர் - காரைக்குடி - விருதுநகர் திருநெல்வேலி உள்ளிட்ட 14 மாவட்டங்களில் டைடல் பூங்கா நிறுவப்பட உள்ளதாகவும், இதனால் மாநிலத்தின் தொழில் வளம் பெருகும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வளர்ச்சி அடைந்த பாரதத்திற்கான ஊரக வளர்ச்சி வேலை உறுதி மற்றும் வாழ்வாதார திட்டத்தினால் மாநில

அரசுக்கு ஐயாயிரம் கோடி ரூபாய் வரை நிதி சுமை அதிகரிக்கும் என்றும், இந்த திட்டத்தை திரும்ப பெற்று, மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்திற்கு கூடுதல் நிதி ஆதாரங்களை ஒதுக்கி அதனை செயல்படுத்த வேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

தமிழகத்தின் பொருளாதார வளர்ச்சி கடந்த 14 ஆண்டுகளில் முதல்முறையாக 11.19 சதவிகிதமாக உயர்ந்து நாட்டிலேயே முன்னோடி பொருளாதார மாநிலமாக தமிழகம் உருவெடுத்திருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மீனவர்களின் பிரச்சனைக்கு தீர்வு காண பேச்சுவார்த்தைகளுக்கான கூட்டு பணிக்குழுவை மீண்டும் உயிர்ப்பித்து ஆவன செய்ய மத்திய அரசு முயற்சிகள் மேற்கொள்ள வேண்டும் என்றும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

சென்னை மெட்ரோ ரயில் திட்டத்தின் இரண்டாம் கட்ட பணிகளுக்கான நிதி விடுவிக்கப்பட்டால் காலக்கெடுவிற்கு முன்னதாகவே இப்பணிகள் முடிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

காலை உணவு திட்டம், தோழி விடுதிகள், தாயுமானவர், அன்புசோலை, பழங்குடியினருக்கான தொல்குடி திட்டம்

உள்ளிட்ட பல்வேறு மக்கள் நல திட்டங்கள் குறித்து இதில் எடுத்துரைக்கப்பட்டது.

இளைஞர்களின் ஆற்றலை வெளிக்கொணரும் வகையில், விளையாட்டு வீர வீராங்கனைகளின் வளர்ச்சி ஊக்குவிக்கப்பட்டு உள்கட்டமைப்பு மேம்படுத்தப்பட்டு பல்வேறு நடவடிக்கைகள் முனைப்புடன் மேற்கொள்ளப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

************

அப்பாவு

இதனிடையே தமிழக சட்டப்பேரவை கூட்டத்தொடர் வரும் 24ஆம் தேதிவரை நடைபெறும் என பேரவை தலைவர் திரு.அப்பாவு தெரிவித்துள்ளார்.

அலுவல் ஆய்வுக்குழு கூட்டத்தில் இதற்கான முடிவு எட்டப்பட்டதாக அவர் கூறினார்.

மறைந்த உறுப்பினர்களுக்கு பேரவையில் நாளை இரங்கல் தீர்மானம் நிறைவேற்றப்பட உள்ளது.

வரும் 22, 23, 24ஆம் தேதிகளில் ஆளுநர் உரை மீதான விவாதங்கள் இடம்பெறும்

வரும் 24ஆம் தேதி முதலமைச்சர் பதிலுரை அளிப்பார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

************

சத்துணவு ஊழியர்கள்

காலமுறை ஊதியம், பணிக்கொடை வழங்குதல், காலி பணியிடங்களை நிரப்புதல் உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி தமிழகத்தின் அனைத்து மாவட்ட தலைநகரங்களிலும் சத்துணவு ஊழியர்கள் வேலைநிறுத்த போராட்டத்தில் இன்று ஈடுபட்டுள்ளனர்.

விழுப்புரம் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் எதிரில், திருச்சி – சென்னை நெடுஞ்சாலையில் 300க்கும் மேற்பட்ட சத்துணவு பணியாளர்கள் தரையில் அமர்ந்து போராட்டத்தில் ஈடுபட்டதால், போக்குவரத்து பாதிக்கப்பட்டது.

தேனியில், மறியலில் ஈடுபட்ட சத்துணவு அமைப்பாளர்கள், உதவியாளர்கள் என 300க்கும் மேற்பட்டோரை காவல்துறையினர் கைது செய்தனர்.

ராணிப்பேட்டை முத்துக்கடை பேருந்து நிலையம் அருகே கோரிக்கைகளை உடனடியாக நிறைவேற்ற வலியுறுத்தி பணியாளர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

நாமக்கல் மணிக்கூண்டு அருகே மறியலில் ஈடுபட்ட 100க்கும் மேற்பட்ட பணியாளர்களை காவல்துறையினர் கைது செய்தனர்.

************

ரோப்கார்

பழனி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோவில் ரோப் கார் சேவை பராமரிப்பு பணிகளுக்காக நாளை ஒருநாள் நிறுத்தம் செய்யப்படுவதாக கோவில் நிர்வாகம் தெரிவித்துள்ளதாக எமது செய்தியாளர் கூறுகிறார்..

வாய்ஸ்

************

தூத்துகுடி:

தூத்துகுடியிலிருந்து இலங்கைக்கு கடத்தப்பட இருந்த 50 லட்ச ரூபாய் மதிப்பிலான புகையிலை பொருட்களை கடலோர பாதுகாப்பு குழும காவல்துறையினர் பறிமுதல் செய்தனர்.

************

கேலோ இந்தியா

6-ஆவது கேலோ இந்தியா குளிர்கால விளையாட்டு போட்டிகள் லடாக் யூனியன் பிரதேசம் லே-வில் இன்று தொடங்கியது.

21 மாநிலங்கள் யூனியன் பிரதேசங்களை சேர்ந்த ஆயிரம் வீர வீராங்கனைகள் இதில் களமிறங்குகின்றனர்.

************

கிரிக்கெட்

மகளிர் பிரீமியர் லீக் 20-20 கிரிக்கெட் போட்டியில் வதோதராவில் இன்றிரவு ஏழரை மணிக்கு டெல்லி கேப்பிட்டல்ஸ் – மும்பை இண்டியன்ஸை எதிர்கொள்கிறது.

************

இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது